1117

BHARATI

1451

NEW METHOD READER

FIRST READER

OFFICE
20 FEB
MADRAS

P. N. CHIDAMBARA MUDALIAR BROS.,
MADRAS. MADURA. TINNEVELLY Jn.

பாரதி

புதுமுறை வாசகம்

முதற் பாடம்

1457

நூலாசிரியர்:

அ. கி. பரந்தாமனார்,

தலைமைத் தமிழாசிரியர், திருப்பவுற் கலாசாலை,

வேப்பேரி, சென்னை.

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்

மதராஸ் :: மதுரை :: திருநெல்வேலி ஜங்ஷன்

பதிப்புரிமை] 1939 [விலை அணா 3.

முகவுரை

நமது நாட்டுச் சிறுவர்கள் எளிதில் கற்குமாறு புதுமுறையில் இச் சிறு நூல் எழுதப்பட்டுள்ளது. குழந்தைகள் பாட்டுக்கள் படிப்பதற்குச் சில பாட்டுக்களும் இதில் தரப்பட்டுள்ளன. குழந்தைகள் இதை மகிழ்ச்சியோடு படித்தல் கூடும் என்று நம்புகிறேன். எழுத்தைப்பற்றிக் கவலைப் படாமலே சொற்களைப் பயிலவேண்டும் என்பதே இந் நூலின் நோக்கமாகும். ஆசிரியர்கள் இதை ஆதரிக்குமாறு வேண்டுகிறேன். இந்நூல் வெளி வருவதற்குப் பேருதவியாயிருந்த பிரமசமாஜப் பள்ளிக்கூட ஆசிரியர் திரு. ஞானசுந்தரன் அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

தமிழகம்,
18, முத்துமுதலி தெரு,
புரசை, சென்னை.

இப்படிக்கு,
குழந்தைகளின் தொண்டன்
அ. கி. பரந்தாமன்.

டம்மாரம் அடி டம்மாரம்
டம்டம் அடி டம்மாரம்



யானைமேலே
டம்மாரம்

குதிரைமேலே
டம்மாரம்



சேனைமுன்னே
டம்மாரம்

வானவெளியே
டம்மாரம்

மாலையிடச்சே
டம்மாரம்

காட்டுக்குள்ளே
டம்மாரம்

கடலோரத்தே
டம்மாரம்

டம்மாரம் அடி டம்மாரம்
டம் டம் அடி டம்மாரம்



ஈ



படம்

பழம்



ஏர்



வயல் ஊஞ்சல்





நகம் ஒட்டகம்



கண் கன்னம்

தச்சன் சக்கரம்





மத்தளம் பலகை



ஒணான் எற்றம்



அம்மி

எலி



உறி

இலை





குளம் சங்கு





ஆடு பந்து



கப்பல்

பல்	மரம்	மஞ்சள்
கல்	மகன்	வட்டம்
கண்	மகள்	பவளம்
மண்	கடல்	உயரம்
ஏர்	வயல்	உழவர்
ஊர்	அகல்	ஏப்பம்



காகம்　　நாய்

வா வா	வாய்	வானம்
தாத்தா	காய்	தாகம்
பாப்பா	பார்	சாயம்
மாமா	யார்	ராகம்

மைனா

அணா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1940
MADRAS



கிளி	கீரி
சிங்கம்	சீப்பு
தடி	டீ
விசிறி	வீதி

உளி	கிண்ணி	கஞ்சி
மணி	தண்ணீர்	கரடி
தயிர்	அரிசி	பன்றி



எறும்பு — குடம்

பசு — ஆயுதம்

முறம் — கதவு

கரும்பு — கழுகு

புல்	ருசி	குளம்	கிணறு
வீடு	கணு	முயல்	சுக்கு
துணி	புழு	முத்து	காற்று



கூடு ரூபாய்

சூரியன் தூண்

நூல் குண்டூசி

மூக்கு பூட்டு

அயலூர் உள்ளூர்

பூ பூணூல்

சுகுணா! கதவு மூடு.



செக்கு	சேவல்
பெட்டி	பேனா
தென்னை மரம்	தேங்காய்
வெங்காயம்	வேர்

செடி	வெல்லம்	தேள்
நெய்	வெந்நீர்	சேலை
நெருப்பு	வெண்ணெய்	எண்ணெய்

பை

கை

வாழை

மீசை



தலை

யானை

மணை

கிளை

பானை காலை எலி வளை

சேனை மாலை மீன் வலை

கொடி   கோவில்

தொட்டி  தோசை

நொண்டி நோயாளி

மொட்டை மோதிரம்

சோறு	கொசு	தோப்பு
நோய்	கோழி	மோட்டார்
மோர்	பொங்கல்	கோதுமை



(விடப்பட்ட எழுத்தைப்போட்டு எழுது.)

1. குர — கு
2. புத் — கம்
3. கிண் — ம்
4. சட் —
5. ம — ல்
6. ஓணா —
7. க —
8. ஊஞ — சல்
9. — டை
10. — யல்
11. பூட் —
12. கட் — ல்



(இந்தப் படங்களைப்பார்த்து ஒவ்வொன்றிற்கும் பெயர் எழுது.)

ஐ ஔ



பையன்

தலை	கால்
முகம்	மூக்கு
கண்	காது
கை	விரல்
பல்	உதடு
வாய்	வயிறு



குடும்பம்

அப்பா	அம்மா
தம்பி	தங்கை
மகன்	மகள்
பாட்டன்	பாட்டி
மாமன்	மாமி
அண்ணன்	அண்ணி
அத்தான்	அக்காள்



பள்ளிக்கூடம்

பலகை

பலப்பம்

புத்தகம்

பென்சில்

மேஜை

நாற்காலி

மைக்கூடு

பேனா

உபாத்தியாயர்

பிள்ளைகள்



படுக்கை அறை

பாய்	மெத்தை
கட்டில்	தலையணை
விளக்கு	ஜன்னல்
துப்பட்டி	விசிறி
ஜமக்காளம்	கொசுவலை

கதவை மூடிப் படுக்காதே.

முகத்தை மூடித் தூங்காதே.

காய்கள்



கத்தரிக்காய்



வண்டைக்காய்



முருங்கைக்காய்



அவரைக்காய்



புடலங்காய்

கிழங்குகள்



உருளைக்கிழங்கு



கருணைக்கிழங்கு



முள்ளங்கிக்கிழங்கு

மரங்கள்



வாழை இலை
வாழைப் பூ
வாழைக் காய்
வாழைக் குலை



மா இலை
மாங்காய்
மாவடு
மாங்கொத்து



தென்னம் ஓலை.
தென்னம் பாளை
இளநீர்
தென்னங் குலை

வாழைப்பழம், மாம்பழம், தேங்காய்.

சுவைகள்



பலாப் பழம்
இனிப்பு.

வாழைக் காய்
துவர்ப்பு.

புளியம் பழம்
புளிப்பு.

வேப்பங்காய் கசப்பு.

கடல் - நீர் உப்பு.

மிளகாய் காரம்.

பறவைகள்



(பெயரைக்கொண்டு பறவையைக் கண்டுபிடி.)

1. கோழி 3. புறா 5. கிளி

2. காகம் 4. மயில் 6. ஆந்தை

வ ண் டி க ள்



மா ட் டு
வண்டி



கு தி ரை
வண்டி



மோட்டார்
வண்டி



ரயில் வண்டி

வண்டிகள்



டிராம் வண்டி



பஸ் வண்டி



சைக்கில்வண்டி



ரிக்ஷா வண்டி

மிருகங்கள்



நாய்
குலைக்கும்.

பூனை
சீறும்.



பசு
கதறும்.



பன்றி
உறுமும்.

மிருகங்கள்



சிங்கம்
கர்ச்சிக்கும்.



கழுதை
கத்தும்.



குதிரை
கனைக்கும்.



நரி
ஊளையிடும்.



பூனை
சிறியது.

யானை
பெரியது.



ஒட்டகம்
நெட்டை.

நரி
குட்டை.



மாடு
பருத்தது.

மான்
மெலிந்தது.

அகலமான மார்பு
நீளமான கை



குயவன்



தச்சன்

கொத்தன்

தட்டான்

குறவன்



சேணியன்



நீ வா.	பாடம் படி.
இங்கு நில்.	உட்கார்ந்து எழுது.
அங்குப் போ.	எடுத்துக் காட்டு.
தலை நிமிர்.	பலகையைக் கீழே வை.
கை நீட்டு.	நன்றாய் எழுது.
கால் மடக்கு.	திரும்பிப் போ.

நீ ———.

உன் ——— நீட்டு.



மேல் முன் உள்ளே

கீழ் பின் வெளியே

1. வீட்டின் மேல் கோழி இருக்கிறது.
2. வீட்டின் — தரை இருக்கிறது.
3. வீட்டின் — நாய் இருக்கிறது.
4. வீட்டின் — தோட்டம் இருக்கிறது.
5. வீட்டின் — குழந்தை இருக்கிறது.
6. வீட்டின் — பசு இருக்கிறது.



குழந்தை	குழந்தைகள்
பையன்	பையன்கள்
பெண்	பெண்கள்
பல்	பற்கள்
வீடு	வீடுகள்
கூலியாள்	கூலியாட்கள்
சிறுவன்	சிறுவர்

விளையாட்டுகள்

சுந்தரன் பம்பரம்
ஆடுகிறான்.

கண்ணனும்
கந்தனும் பந்து
ஆடுகிறார்கள்.

அம்புஜம்
ஏழாங்காய்
ஆடுகிறாள்.

விஜயாவும்
ஜயாவும் கும்மி
அடிக்கிறார்கள்.

பெண்கள்
கோலாட்டம்
போடுகிறார்கள்.

விளம்பரங்கள்

அறிவிப்பு

திருடர்கள் ஜாக்கிரதை.

அபாய அறிவிப்பு

ஆபத்தில் இந்தச் சங்கிலியை இழுங்கள். வீணுக இழுத்தால் ரூபாய் 50 அபராதம்.

கதவு அருகில் நிற்காதே.



தீபாவளிப் பண்டிகை

நாங்கள் நேற்றுத் தீபாவளிப் பண்டிகை கொண்டாடினோம்.

நாங்கள் காலையில் எழுந்து தலை முழுகினோம்.

எங்கள் அப்பா புதிய உடைகளைத் தந்தார்.

நாங்கள் தோசை, லட்டு, வடை தின்றோம்.

எங்கள் மாமா பட்டாசு வாங்கித் தந்தார்.

நாங்கள் பட்பட் என்று சுட்டோம்.

சுக வழி

1. நீ காலையில் எழுந்திரு.
2. நீ கை, கால் கழுவு.
3. நீ உடலைத் தேய்த்துக் குளி.
4. நீ கையைக் கழுவி உண்.
5. நீ நிமிர்ந்து படி.
6. நீ நிமிர்ந்து நட.
7. நீ அசுத்தமான பண்டம் உண்ணாதே.
8. நீ எச்சிலை எங்கும் துப்பாதே.
9. நீ துட்டுகளை வாயில் போட்டு அடக்காதே.
10. நீ உடற் பயிற்சி செய்.

நல் வழி

1. நீ உபாத்தியாயருக்கு வணக்கம் செய்.
2. நீ வகுப்பில் காலை ஆட்டாதே.
3. நீ போகும்போது ஒழுங்காய்ப் போ.
4. நீ பெரியோரைக் கண்டால் எழுந்திரு.
5. நீ யாரையும் மரியாதையாய்க் கூப்பிடு.
6. நீ யாரிடத்திலும் அடக்கமாய்ப் பேசு.
7. நீ பெரியோர் முன்னிலையில் கொட்டாவி விடாதே.
8. நீ தெருவில் கைதட்டிக் கூப்பிடாதே.
9. நீ உத்தரவு இல்லாமல் உள்ளே நுழையாதே.
10. நீ வந்தனம் சொல்லப் பழகு.



மழை வா

கொட்டைப் பாக்கு
நறுக்கித் தாரேன்.

கோவில் மண்ணைத்
தெள்ளித் தாரேன்.

ஜோர் மழை வா!
ஜோர் மழை வா!!
ஜோர் மழை வா!!!

விடுகவிகள்

ஜாடி மேலே குரங்கு.

எது?





செம்பு நிறையக் கெம்பு.

எது?

டாக் டீக் என்னுமாம் குதிரை. தண்ணீர் கண்டால் தவிக்குமாம் குதிரை. எது?



ஊருக்கு எல்லாம் ஒரே துப்பட்டி. எது?

இது என்ன?



இது என்ன?

இது எங்கே

இருக்கிறது?



இவைகள் என்ன

செய்கின்றன?



இவைகள் என்ன

செய்துகொண்டு

இருக்கின்றன?



எலி எங்கே
இருக்கிறது?

தவளை எங்கே
இருக்கிறது?



மேலே பறப்பது
எது?

தண்ணீர் மேல்
மிதப்பது எது?



பருந்து என்ன

செய்கிறது?



பருந்து இங்கே
என்ன செய்கிறது?

எலியும் தவளையும்
என்ன ஆயின?

குழந்தைகள் பாட்டுகள்

(1)

முயற்சி செய், முயற்சி செய்,
முடியு மட்டும் முயற்சி செய்,
அயர்ச்சியின்றி முயற்சி செய்,
அடையு மட்டும் முயற்சி செய்.

(2)

ஆடும் வேளையில் ஆடிடுவாய்.
அயரும் வேளையில் அயர்ந்திடுவாய்.
பாடும் வேளையில் பாடிடுவாய்.
படிக்கும் வேளையில் படித்திடுவாய்.

ஒன்றே நன்ருய்ச் செய்திடுவாய்.
ஒன்பது செய்யின் கெடுத்திடுவாய்.
நன்றே இதனைப் படித்திடுவாய்.
நாளும் செய்து வாழ்ந்திடுவாய்.

(3)

1. சங்கு சக்கர சாமி வந்து
சிங்கு சிங்கென ஆடுமாம்—அது
சிங்கு சிங்கென ஆடுமாம்—அது
சிங்கு சிங்கென ஆடுமாம். (ச)

2. கொட்டுக் கொட்டுச் சொல்லுமாம்
—அது
கூத்து பாடப் பண்ணுமாம். (ச)

3. உலகம் மூன்றும் அளக்குமாம்
ஓங்கி வானம் பிளக்குமாம். (ச)

4. கலகலென்று சிரிக்குமாம்.
காணக் காண இனிக்குமாம். (ச)

தேனீ

1. சோலை யதனில் உள்ள
தேனை உண்ண மெள்ள
காலை வந்திடுங் கள்ள!
கவலை என்ன சொல்ல?

2. ஓடி உழைக்கும் நண்ப!
உளக்க மிக்கோய் என்ப.
நாடி உனைப்போல் அன்ப!
நாளும் உழைப்பேன் நண்ப!

எங்கள் தோட்டம்

1. எங்கள் தோட்டம் வந்துபார்.
என்ன என்ன அழகுபார்.
தொங்கும் கொடிகள் வனப்பைப்பார்.
தொட்டாற் சிணுங்கி மதிலில்பார்.

2. இயற்கை அழகை உற்றுப்பார்.
இன்பம் நடனம் ஆடல்பார்.
செயற்கை அழகில் என்னபார்.
தேவ தேவன் அழகைப்பார்.



ஈ

(1) கொடிய கொடிய ஈயே!
கொடுமை செய்கிறாய் நீயே!
மடியச் செய்திடும் ஈயே!
மாண்டு போவாய் நீயே!

(2) குப்பை மலத்தின் ஈயே!
கும்பலாய்க் கொல்வாய் நீயே!
எப்போ தொழிவாய் ஈயே?
எமனை நிகர்ப்பாய் நீயே!

(3) சுத்தமாய் இருந்து கொல்வோம்!
சுகமாய் வாழ வெல்வோம்!
எத்தனை வரினும் அழிப்போம்!
எங்கள் உயிரைக் காப்போம்!

○	ஒன்று	○○○○○○	ஆறு
○○	இரண்டு	○○○○○○○	ஏழு
○○○	மூன்று	○○○○○○○○	எட்டு
○○○○	நான்கு	○○○○○○○○○	ஒன்பது
○○○○○	ஐந்து	○○○○○○○○○○	பத்து

11. பதினொன்று 16. பதினாறு

12. பன்னிரண்டு 17. பதினேழு

13. பதின்மூன்று 18. பதினெட்டு

14. பதினான்கு 19. பத்தொன்பது

15. பதினைந்து 20. இருபது

10	20	30	40	50	60	70	80	90	100